**செய்தி வெளியீடு எண்:890** **நாள்:20.11.2020**

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>"தேசிய முன் பருவ குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி கொள்கை" குறித்த மறு ஆய்வு</u>

தேசிய முன் பருவ குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி எனும் அரசின் கொள்கை குறித்து மறு ஆய்வு, 20.11.2020 அன்று மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர், திரு. சி. பொன்னையன் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இணைய வழியாக நடத்தப்பட்ட இந்த ஆய்வுக் கூட்டத்தில், இந்த திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பினைக் கொண்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் உயர் அலுவலர்களும், கல்வி, குழந்தை நலம் சார்ந்த துறை வல்லுநர்களும் இதர தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்களும் பங்கேற்று தங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தெரிவித்தனர்.

மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர் திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., அவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றவர்களை வரவேற்று இக்கூட்டத்தின் முக்கிய நோக்கங்களை விளக்கினார்.

முன் பருவ குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி, 2013 எனும் தேசியக் கொள்கையை தமிழக அரசும் பின்பற்றி இதனை செயல்முறைபடுத்தி வருகிறது. இந்த, முன் பருவ குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி சேவைகள், அரசு, தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு சாராத நிறுவனங்கள் வாயிலாகவும் வழங்கப்பட்டு வருகிறது. முன் பருவ குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி சேவையை வழங்குவதில், அரசின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் பெருமளவில் சேவை அளிக்கும் அமைப்பாக திகழ்ந்து வருகிறது.

இக்கொள்கை செயலாக்கம் குறித்து, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் உயர் அலுவலர்களால் விரிவாக விளக்கப்பட்டது. சென்னையில் இயங்கி வரும் **"சீட்"** எனும் முன்பருவ பள்ளியின் நிறுவனரும் முன்பருவ குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி பணிகளில் வல்லுநருமான முனைவர். ஜெயா சாஸ்திரி அவர்கள் குழந்தைப் பராமரிப்பு மற்றும் முன் பருவ கல்வி பணிகள் தொடர்பான செயல்பாடுகள் குறித்தும் அதன் உட்பொருள் குறித்தும் கருத்து தெரிவித்தார். அனைவருக்குமான கல்வி மற்றும்

அறிவியலை விளையாட்டு வழிமுறையில் குழந்தைகளை சென்றடையச் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள, இந்திய கணிதவியல் நிறுவனத்தின் பேராசிரியர் முனைவர். இராமானுஜம் அவர்கள், இக்கொள்கை அனைத்து தரப்பு மக்களுக்குமானது என்பதையும் அதன் உள்ளடக்கத்தையும் வலியுறுத்தினார். இந்திய குழந்தைகள் நலன் குழுமத்தின் தலைவர் திருமதி. ஆண்டாள் தாமோதரன் அவர்கள் குழந்தைகளின் உணர்வு மற்றும் உளவியல் மேம்பாடு ஆகியவை குறித்தும், முன் பருவ குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி கொள்கையில் அவற்றின் தொடர்பு குறித்தும் உரையாற்றினார். திருமதி. சுனிஷா அஹூஜா, முன்பருவ குழந்தை கல்வி நிபுணர், யூனிசெப், புதுதில்லி அவர்கள் முன்பருவ குழந்தை கல்வியின் விளைவுகள் மற்றும் ஆரம்பப் பள்ளி சேர்க்கை மற்றும் சிறந்த கற்றல் திறன் என்ற பொருளில் உரையாற்றினார்.

திருமதி. மதுமதி, இ.ஆ.ப., அரசு செயலாளர், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அவர்கள், தமது சிறப்பு உரையில் முன்பருவ குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்விக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் மாநில அரசு மிகச் சிறந்த முறையில் செயலாற்றி வருவதாகத் தெரிவித்தார். தமிழகத்தில் அங்கன்வாடி மையப் பணியாளர்கள் சிறப்பு கால முறை ஊதியத்தில் நியமிக்கப்படுவதாகவும் அவர்களின் பணியினை ஊக்கப்படுத்திடும் வகையில், சிறந்த பணியாளர்களுக்கு விருது, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பண முடிப்பும் வழங்கப்படுகிறது எனவும் தெரிவித்தார். நடுநிலைப் பள்ளிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள அங்கான்வாடி மையங்களில் மழலையர் வகுப்புகள் அறிமுகப்பட்டள்ளதாகவும் இவற்றிற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளதாகவும் தெரிவித்த அவர், கொரனோ பெருந்தொற்று காலத்திலும் அதிக எண்ணிக்கையில் மழலையர் சேர்க்கை நடைபெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். இம்மையங்களில் பயிலும் மழலையர்கள் மிகவும் உற்சாகத்துடன் இருப்பதை காணமுடிவதாகவும் தெரிவித்தார். மேலும், அங்கான்வாடி மையங்களில் மழலையர்களுக்கு சிறுதானியங்கள் சேர்க்கப்பட்ட சத்தான உணவுகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலம், முன்னோடி திட்டமாக சில மாவட்டங்களில் சிறுதானிய தின்பண்டங்களும் மற்றம் கீரை சாறும் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். இதன்மூலம், பிள்ளைகளின் தொடர் வருகை உறுதி செய்யப்படுவதோடு, ஆரோக்கியமான தமிழகத்தை கட்டமைக்கப்படுவதும் உறுதி செய்யப்படுவதாகத் தெரிவித்தார்.

திரு. சி. பொன்னையன், மாண்புமிகு துணைத் தலைவர், மாநில வளர்ச்சி கொள்கைக் குழு அவர்கள் தனது நிறைவுரையில் குழந்தைகள் நலன் மற்றும் அவர்களுக்கான கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் வெகுவாக முன்னேற்றம் கண்டு, முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது எனவும் முன் பருவ குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்விக் கொள்கையை நடைமுறைப்டுத்தவதில் தமிழகம் சிறந்த முறையில் செயலாற்றி வருவதாகவும் தெரிவித்தார். இந்த அரசு, பாடதிட்டத்தின் உள்ளடக்கங்களை காலத்துக்கேற்றவாறு புதுப்பிக்க, கல்வியாளர்கள் மற்றும் துறை சார்ந்த வல்லுநர்கள் ஆகியோரின் சேவையை தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளும் எனவும், இக்கொள்கையின் நோக்கமான அனைவரையும் சென்றடைவதை உறுதி செய்யும் எனவும் தெரிவித்தார். இத்திட்டம், ஏழை, எளியோர் குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தினர் விடுபடாமல் அனைவரையும் சென்றடைய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார். சமூகத்தில் நெடுங்காலமாக நிலவி வரும் பாலின பாகுபாட்டையும் ஆணாதிக்க மரபுகளையும் ஒழிப்பதன் மூலமும் ஊரக, நகர்ப்புற பகுதிகளில் குழந்தைக் காப்பகங்கள் அமைப்பதன் வாயிலாகவும் பெண்கள் வேலைக்கு செல்வதை அதிகரிக்க இயலும் என்றுத் தெரிவித்தார். இத்திட்டம் குறித்த பரப்புரை / விழிப்புணர்வு செய்திகள் பெற்றோர்களுக்கு ஊடகங்கள் வாயிலாக அளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் விவாதங்களின் மையக் கருத்து அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என உறுதி அளித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**